வளன்ஆயம்
நொடிதோறும் புதுமைசேர்
தமிழாய்வுத்துறை
தூய வளனார் கல்லூரி [தன்னாட்சி]
திருச்சிராப்பள்ளி- 620002

# கிறித்தவ இலக்கிய உலகில் ஆ.பி.அந்தோணி இராசு

**லூ. அருண் பிரகாஷ்**
முனைவர் பட்ட ஆய்வாளர் (தமிழாய்வுத் துறை)
தூய வளனார் கல்லூரி
திருச்சிராப்பள்ளி - 02

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழில் சிற்றிலக்கியங்களின் வளர்ச்சியின் ஊடே கிறித்தவச் சிற்றிலக்கியங்களும் தோன்றி வளர்ந்து வந்தன. பொதுவாக சிற்றிலக்கியங்களின் பாட்டுடைத் தலைவர்களாக இறைவனோ, மன்னனோ இருப்பார்கள். அவர்கள் மீது சிற்றிலக்கியங்கள் பாடப்பெற்றிருக்கும். ஆனால் கிறித்தவ சிற்றிலக்கியங்கள் எல்லாமே பெரும்பாலும் புனிதர்களின் வாழ்க்கை வரலாற்றினையும், அவர்கள் செய்த புதுமைகளையும் எடுத்துரைப்பதாகவே வெளிவந்துள்ளன. அந்த வகையில் ஆசிரியர் ஆ.பி. அந்தோணி இராசு கிறித்தவ இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பணியை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**கலைச்சொற்கள்**

**அர்ச், அம்மானை, கண்ணிகள், சமயம், மறைபரப்பு. புதுமை, ஆன்மா, மச்சங்கள்**

**முன்னுரை**

தமிழ் இலக்கியங்கள் வளர்ந்திட பலரும் பல்வேறு கால கட்டத்தில் பல்வேறு விதமான இலக்கியப் படைப்புகளைப் படைத்துள்ள நிலையில் பக்தி இலக்கிய காலமென்று குறிப்பிடப்படுகின்ற பல்லவர் காலத்தில் சைவ, வைணவ சமய இலக்கியங்கள் பெரிதாக வளர்ந்து வந்த நிலையில் சமயம் பரப்பிட வந்த

மேலைநாட்டு கிறித்தவப் பாதிரிமார்கள் சமயத்தை மட்டும் பரப்பிடாது தமிழ்மொழியைக் கற்றுக்கொண்டு, தமிழ்மொழிக்கென்று தங்களை ஆர்ப்பணித்ததன் விளைவால் கிறித்தவ சமயத்தில் பல்வவேறு இலக்கியங்கள் எழுந்தன. அத்தகைய இலக்கியங்களுள் சில அழிவின் விளிம்பு நிலைக்குச் சென்றன. அவற்றுள் சிலவற்றைக் கண்டுணர்ந்து ஆ.பி.அந்தோணி இராசு அவர்கள் ஆராய்ச்சிப் பதிப்புகளாக வெளியீடு செய்துள்ளார். அத்தகைய ஆசிரியர் கிறித்தவ இலக்கிய வளர்ச்சிக்கு ஆற்றியுள்ள பங்கை வெளிப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

**அந்தோணி ராசாவும் கிறித்துவப் பணியும்**

தமிழ் கிறித்தவ உலகில் ஆ.பி. அந்தோணி இராசு அவர்களின் பங்கு இன்றியமையாத ஒன்றாகும். அந்தோணி இராசு 1934 ஆம் ஆண்டு பிறந்தார் இவரது தந்தை எஸ்.ஆரோக்கியசாமி ஆவார். இவர் சுடர்மணி என்னும் காப்பியத்தினை இயற்றியதன் மூலமாக ஆசுகவி பட்டத்தைப் பெற்றார்

ஆ.பி. அந்தோணி இராசுவின் தத்தைமான எஸ்.ஆரோக்கிய சாமி அவர்கள்,

- மறைத்தொண்டர் புராணம்
- சிலுவைப்பாதை
- செபபாமாலை
- வேளாங்கண்ணி மாதா சரிதம்

முதலான நூல்களைப் படைத்துள்ளளார். அதன் வழிவத்த ஆ.பி. அந்தோணி இராசு அவர்கள் கிறித்தவ இலக்கியங்கள் மீதுகொண்ட ஈடுபாட்டின் காரணமாக அழியும் தருவாயில் இருந்த சில நூல்களை கிறித்தவ நூல்களை மறுபதிப்பு செய்துள்ளார்.

**ஆ.பி. அந்தோணி இராசுவின் கல்விப் பணி**

ஆ.பி.அந்தோணி இராசு சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைப்பட்டம், ”1978இல் அமெரிக்க ஐக்கிய நாட்டிலுள்ள ஓகியோ மாநிலப் பல்கலைக்கழகத்தில் பயின்று இதழியல் முதுகலைப்பட்டம் பெற்றார்.”[1] மேலும் அருட்தந்தை இராசமாணிக்கம் அவர்களின் வழிகாட்டுதலின் பெயரில் 1985இல் கிறித்தவ அம்மானைகள் எனும் தலைப்பில் ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றுள்ளார்.

திருச்சி தூய வளனார் தன்னாட்சி கல்லூரியில் 30 ஆண்டுகாலம் தமிழ்ப்பேராசிரியராகப் பணியாற்றினார். இவருடயை காலத்தில் பயின்ற மாணவர் களுக்கு இதழியில் கலையினைச் சிறப்பாகக் கற்பித்தார். அதனோடு மட்டுமல்லாது "திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மொழி-இலக்கிய ஆய்வுப் பள்ளியில் சிறப்புப் பேராசிரியராக இருந்து இதழியல், தொடர்புகலை சான்றிதழ் வகுப்புகளை நடத்தியுள்ளார்”[2] என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்

**மேலைநாட்டு பயணம்**

ஆ.பி. அந்தோணி இராசு தனது பணிக்காலத்தில் கனடா, இத்தாலி, சுவிட்சர்லாந்து, ஜெர்மனி டென்மார்க், ஸ்வீடன், பெல்சியம், இங்கிலாந்து, பிரான்சு ஆகிய மேலைநாடுகளுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார்.

**இலக்கியப்பணி**

ஆ.பி. அந்தோணி இராசு சிறந்த மேடைப்பேச்சசாளர் மட்டுமல்ல கவிஞரும் கூட. மேலும் அவர் "கிறித்தவ அம்மானைச் சிந்தனைகள்" எனும் ஆய்வு நூலை எழுதியுள்ளார், கிறித்தவ சமயம் சார்ந்து எழுந்த அம்மானைகளுக்குப் புத்துயிர் அளிக்கும் வகையில் அவற்றை மறுபதிப்பு செய்ததோடு மட்டுல்லாது, அதற்கு ஆராய்ச்சி முன்னுரையும் எழுதி அவற்றைத்

தமிழ் கூறும் உலகிற்கு மீட்டுவழங்கினார். அத்தகைய மறுபதிப்பு செய்யப்பெற்ற அம்மானை நூல்களின் பட்டியல் பின்வருமாறு.

1.அர்ச் அந்தோணியார் அம்மானை

2) அர்ச். லூர்துமாதா அம்மானை

3) அர்ச். செபஸ்தியார் அம்மானை

4)அர்ச் அருளானந்தர் அம்மானை

5)அர்ச். சவேரியார் அம்மனை

(6) அர்ச். இசிதோர் அம்மானை

7) அர்ச். தோமையார் அம்மானை

8) கோனாங்குப்பம் அர்ச். பெரியநாயகி அம்மானை

9) அர்ச் மரிகருத்தம்மாள் அம்மானை

(6) அர்ச். அலசு அம்மானை

முதலியவற்றிற்குப் புத்துயிர் அளிக்க அவற்றைப் படைத்துள்ளார். அத்தகைய அம்மானைகளில் ஒரு சிலவற்றை விரிவாகக் காண்போம்

**அர்ச். லூர்துமாதா. அம்மானை**

அன்னை மரியாள் அருள் வழங்குமிடம் அன்னை மரியாவின் தோற்றச் சிறப்பு, பெர்னதெத் அனுபவித்த துன்பங்கள், அன்னை மரியாவிற்கான பெயர்காரணங்களை முதலியவற்றை எடுத்துரைக்கும் இலக்கியமாக அர்ச். லூர்துமாதா அம்மானை வெளிவந்தது. இதனை யாகப்ப முதலியார் வெளியிட்டார். அழியும் தருவாயிலிருந்த அம்மானைகளில் இதுவும் ஒன்றாகக் கருதப்பெற்ற நிலையில் 1987இல் ஆ.பி. அந்தோணி இராசு அவர்களே இதனை

மறுபதிப்பு செய்து ஆராய்ச்சி முன்னுரையும் எழுதி வெளியிட்டார். அர்ச்.லூர்து மாதா அம்மானையானது 772 கண்ணிகளையும் 35 தலைப்புகளைலயும் உள்ளடக்கியதாக இந்த அம்மானை இயற்றப்பெற்றுள்ளது. மேலும் அர்ச். லூர்து மாதா அம்மானையில் அன்னை மரியாவினைப் பற்றி கன்னிமரியாள் ஸ்துதி என்னும் பகுதியில் அன்னை மரியாள் காட்சிதந்த தோற்றம் பற்றி கூறப்பெற்றுள்ளது.

**"வெண்ணிற நற்கலை யுரடுத்திப் பூங்கதிர்க**

**ளணிந்திரு மேனியாளை**

**வண்பதத்தால் ரோஜை செடி மிதித்து**

**செபமாலை கரமேந்தினாளை**

**கண்மணி வான்புகழ் நீலக் கற்புகசசை**

**விடைதனிலே கட்டினாளை"**[3]

என்னும் புனித கன்னிமரியாள் ஸ்துதி பகுதியால் அன்னை மரியாள் காட்சி தந்த தோற்றம் பற்றி விளக்கப்படுகின்றது. வெண்ணிற ஆடை அணிந்திருத்தல், ரோஜா செடியைக் காலில் மிதித்திருத்தல் ஜெபமாலையினைக் கையில் ஏந்தியிருத்தல், நீலநிற கட்சை அணிந்திருத்தல், விண்ணோக்கிய பார்வை பெற்றிருத்தல் என அன்னை மரியாளின் தோற்றம் பற்றிக் கூறப்பெற்றுள்ளது.

**அர்ச். சவேரியார் அம்மானை**

அர்ச்ச. சவேரியார் ஸ்பெயின் நாட்டைச் சேர்ந்தவர். அர்ச். சவேரியர் அம்மானையில் ஸ்பெயின் தேசத்தில் பிறந்து, உயர்கல்வியைக் கற்கும் பொருட்டு சவேரியாருக்கும் இன்னாசியாருக்கு ஏற்பட்ட நெருக்கம் காரணமாகத் தனது ஆடம்பர வாழ்வினைத் துறந்து சேசுசபையில் இணைந்து பணியாற்றுகின்ற நிகழ்வினையும், அதனால் அவர் அடைந்த பெருமையினையும் எடுத்துரைப்பதாக இந்த அம்மானை அமைந்துள்ளது. கிறித்தவ அம்மானைகளில் அதிகப்படியான

கண்ணிகளை உடையது சவேரியார் அம்மானை மட்டுமே. மேலும் அவ்வம்மானையின் இரண்டாம் பதிப்பு 1989இல் வெளிவந்துள்ளது. இப்பதிப்பு ஆ.பி. அந்தோணி இராசுவின் ஆராய்ச்சிப் பதிப்பும் கூட.

**"தமக்கினிய புத்திசொன்ன சந்யாசி யாரான**

**எமக்கினிய நேசமுள்ள இன்னாசியார் தமக்குச்**

**சீடனாய வாய்ந்து சிறந்தவுப தேசசவி**

**சேஷமதின் வுட்பொருளைச் சிந்தைதனி லேயுணர்ந்து**

**ஏற்ற திரவியத்தை இரப்போர் தமக்கீந்கு**

**சோற்று மவர்தனக்குச் சுறுசுறுப்பாய் வேலைசெய்து"4 (98-300)**

புனித இலோயோலா இஞ்ஞாசியாருடன் ஏற்பட்ட பழக்கத்தின் காரணமாக இருவரும் ஒன்றாகத் தங்கிப் பயிலும் வேளையில் சவேரியாரின் அறிவுத் இறைவனின் வார்த்தைகளைக் கூறியதன் விளையால் மனமாற்றம் அடைந்த திருச்சபையில் இணைந்தார். அவ்வாறு மனமாற்றம் அடைந்த சவேரியாருடன் திருநிலைப் படுத்தப்பட்டனர் .

மேலும் சமயம் பரப்பிட இந்தியாவிக்கு வந்து சமயத்தைப் பரப்பியதோடு மட்டுமல்லாது. அருகிலிருந்த நாடுகளுக்குச் சென்று தனது மறைப்பணியை மேற் கொண்டு இறுதியில் டிசம்பர் 3 ஆம் தேதி மலாக்கா தீவில் இறந்தார். இறந்த அவரது உடல் அங்கே புதைக்கப்பட்ட நிலையில் அத்தீவில் ஏற்பட்ட கொடிய நோய்கள் எல்லாம் நீங்கின. சில காலம் கழித்துத் தோண்டிய போது அர்ச். சவேரியார் உடல் அழியாது இருந்தது. அவ்வுடல் தற்போது கோவாவில் உள்ள பாம் ஜுசஸ் தேவாலயத்தில் அடக்கம் செய்யப்பெற்றுள்ளது. மேலும் புனித சவேரியார் உடல் இன்னும் கூட சில நேரங்களில் காட்சிப்படுத்தப்படுகின்றன.

**அர்ச் . அந்தோணியார் அம்மானை**

அர்ச். அந்தோணினியாரைப் பற்றி மூன்று அம்மானைகள் இருந்ததாகக் கூறப்பெறுகின்றது. “அர்ச் அந்தோணியார் அம்மானை என்னும் நூலை ஜெகராவு முதலியார் இயற்றியுள்ளார். 1876இல் இவ்வம்மானை வெளிவந்துள்ளது. தோமைப் பிள்ளைப் பட்டங் கட்டியார் என்பவரால் இதே பெயரில் மற்றொரு அம்மானை வெளிவந்துள்ளது” [5]

மேலும்1892இல் அந்தோணி என்பவர் இயற்றிய அர்ச்.அந்தோணியார் அம்மானையானது ஆ.பி.அந்தோணி இராசு அவர்களால் 1992இல் ஆராய்ச்சிப் பதிப்பாக வெளிவந்தது.

மேலும் அர்ச். அந்தோணியார் அம்மானையானது 30 தலைப்புகளையும் 670கண்ணிகளையும் உள்ளடக்கியதாகக் காணப்பெறுகின்றது. மேலும் இவ்வம்மானையில் பாட்டுடைத் தலைவனான அர்ச்.அந்தோணியாரின் வாழ்க்கை வரலாற்றை எடுத்துரைக்கும் வகையிலும், அதில் அவர் நிகழ்த்திய புதுமைகள் பற்றிய நிகழ்வுகளும் குறிப்பிடப்பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக மச்சங்களுக்கு உபதேசித்த காதை என்னும் தலைப்பில் கூறப்பெற்றுள்ள செய்தி என்பது சற்று புதுமையாகக் காணப்பெறுகின்ற நிகழ்வாகும். அந்நிகழ்வு பற்றிச் சில செய்தி பின்வருமாறு,

**”அப்போது அந்தோனி அவன்றனக்(கு) ஓதிடுவோர்**

**தப்பாத ஞானமறை தன்னைப் பகர்க்தேன்யான்**

**நம்பாப் பதிதர்களே நாதனை நீர் தான் வெறுத்தீர்**

**அம்புரனார் வேதமதை அறியாத செந்துகளாம்**

**தத்துகீரை மீன்கள் தானறியச் சாற்றுகின்றேன்**

**புத்தியற்ற மாந்தர்களே பூரணணை பின்னறிவீர்…”(3.25-327)**

புனித அந்தோணியார் தனது மறைப்புரப்புப் பணிக்காக அகுத்தானியா என்னும் நாட்டிற்குச் சென்று அங்கிருந்த மக்களுக்கு மறையுரை ஆற்றிய போது மக்கள் இவரின் மறையுரைக்குச் செவி சாய்க்கவில்லை அதனால் மனம் வருந்திய அந்தோணியார் கடற்கறையில் நின்று கொண்டு மீன்களைக் கரைக்கு வருமாறு அழைத்தார். அவரின் ஆணைக்கு இணங்கு எல்லா மீன்களும் கரைக்கு வந்தன. அம்மீன்களில் வகைகள் மட்டும் 92 எனக் குறிப்பிடப்படுகின்றது."

இவ்வாறு தனது மறையுரை கேட்ட மீன்களை அந்தோணியார் ஆசீர்வதித்தாகக் கூறப்பெறுகின்றது.

**அர்ச். அருளானந்தர் அம்மானை**

அர்ச். அருளானந்தர் அம்மானையினை யாழ்ப்பாணத்திலுள்ள சித்த மருத்தவர் சலோமன் அவர்கள் இயற்றியுள்ளார். இந்நூல் எழுதப்பெற்ற ஆண்டு குறிப்பிடப்படவில்லை எனினும் ஆ.பி. அந்தோணி இராசு அவர்கள் 1968இல் திருத்திய பதிப்பாக இவ்வம்மானையினை வெளியிட்டுள்ளார்.

அர்ச். அருளானந்தர் அம்மானையானது புனிதரின் வாழ்க்கை வரலாற்றினை முழுமையாக எடுத்துரைப்பதோடு மட்டுமல்லாது 142கண்ணிகளை 11 பிரிவுகளையும் கொண்டு இவ்வம்மானை இயற்றப்பெற்றுள்ளது. மேலும் இதில் புனித அருளானந்தர் தனது நாட்டின் தளபதிக்கு மடல் எழுதிய செய்தியும் குறிப்பிடப்பட்ள்ளது. அம்மடல் பற்றிய குறிப்பு பின்வருமாறு.

பெரும் மதிப்பிற்கும், வணக்கத்திற்கும் உரிய தந்தையே!

புனித சவேரியாரின் மன்றாட்டினால் தான் நான் கொடிய நோயினின்று குணமாக்கப் பெற்றேன். அதே சவேரியார்தான் நான் திரு சேசுசபையில் சேர்வதற்குக் காரணம். அவர் பணிபுரிந்த இந்திய மண்ணில் நானும் பணிபுரிய வேண்டும் என்ற ஆவலே அவரே எனக்கு அளிந்துள்ளார். மெய்யியல் பயிற்சி

முடிக்கும் நிலையில் உள்ளேன். இறைவன் திருமுன்னிலையில் நன்கு சிந்தித்த பின்தான் இக்கடிதத்தை எழுதுகின்றேன். இறைவனின் அதிமிகு புகழுக்காகவும், என் ஆன்மாவின் ஈடேற்றத்திற்காகவும்

இந்திய மண்ணில் வேதம் போதிக்கும் அரிய வரத்தை நான் அடையும் பெரும் பேற்றினைத் தாங்கள் தயவு கூர்ந்து அளிக்கும்படி மன்றாடுகின்றேன்'[6] என எழுதப்பெற்றிருந்த கடிதம் புனிதரின் வாழ்வில் இன்றியமையாத ஒன்றாகும் இத்தகைய குறிப்புகளை எடுத்தரைப்பதாக அர்ச் அருளானந்தர் அம்மானை பாடப் பெற்றுள்ளது.

இவ்வாறாக பல்வேறு புனிதர்களின் அம்மானைகளை கண்டறிந்து அவற்றை மறுபதிப்பு செய்து கிறித்தவ உலகிற்று வழங்கிய பெருமை ஆ.பி. அந்தோணி இராசுவைச் சாரும்.

**முடிவுரை**

தமிழ் கூறும் நல்லுலகில் பல்வேறு விதமான இயக்கியங்கள் எழுந்த நிலையிலும் கூட தனது தந்தையைப் போன்று கிறித்தவ இலக்கியங்களின் மீது கொண்ட அதீத ஈடுபாட்டல் அழிவின் விளிம்பில் இருந்த கிறித்தவ அம்மானைகளையும், அதற்குரிய ஆராய்ச்சிப் பதிப்புரையும் எழுதி வெளியிட்டு கிறித்தவ இலக்கியம் வளரக் காரணமானவர் ஆ.பி அந்தோணி இராசு ஆவார். அவர்தம் தொண்டு போற்றுதற்குரியதாகும்.

**துணை நின்ற நூல்கள்**

1) ஆரோக்கிய சாமி இர. - கிறித்தவ இலக்கிய வரலாறு, பூரணரீத்தா பதிப்பகம், பழனியப்பா நகா, நாஞ்சிக் கோட்டை, தஞ்சாவூர்-8506, முதற்பதிப்பு-2010.ப-212

2) மேலது,ப.213

3. எஸ். யாகப்ப முதலியார், அர்ச் தூர்துமாதா அம்மாணை, வாத்துக்காரத் தெரு, உறையூர், திருச்சி, திருந்திய பதிப்பு-1987

4) ஆ.பி . அந்தோணி இராகசு (ப.ஆ)-, அர்ச்.சவேரியார் அம்மானை-ப. 21

5) இன்னாசி ஆ, கிறித்தவ தமிழ்க் கொடை (தொகுதி-4) மெய்யப்பன் பதிப்பகம், புதுத்தெரு, சிதம்பரம் -01, முதற்பதிப்பு-2001

5) சி.கே. சுவாமி, ஓரியூர் ஒளிவிளக்கு, ஆனந்தா பதிப்பகம், ஓரியூர் முதற்பதிப்பு-2014. பக்.22-23